செ.வெ.எண்:574

# அரசு செய்தி வெளியீடு – 11.9.2007

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை இன்று (11.9.2007) பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் திரு. இல. கணேசன் அவர்களும், தமிழகச் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. சுரேஷ்ராஜன் அவர்களும் நேரில் சந்தித்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேசிய விளையாட்டுத் துணை மையம் அமைப்பது சம்மந்தமாக உள்ள சில பிரச்சினைகள் பற்றி விவாதித்தார்கள்.

இப்பிரச்சினை சம்மந்தமாக பாரதிய ஜனதா கட்சியின் திரு. பொன். இராதாகிருஷ்ணன் அவர்கள் உண்ணா விரதம் மேற்கொண்டிருப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளையாட்டுத் துணை மையம் அமைக்கப்படுவதில் தமிழக அரசுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும், ஆனால் மைய அரசின் விளையாட்டு ஆணையம் தான் இதுகுறித்து இறுதி முடிவெடுக்க வேண்டும் என்றும், ஆனால் அந்த ஆணையம் ஏற்கனவே இரண்டு முறை குமரியில் இந்த மையத்தைத் தொடங்க அனுமதிக்காதது தான் அங்கே மையம் வராது போனதற்கான காரணம் என்பதால், மீண்டும் ஒரு முறை தமிழக அரசின் சார்பில் மைய அரசின் விளையாட்டு ஆணையத்துடன் தொடர்பு கொண்டு குமரி மாவட்டத்திலேயே இதனை அமைப்பதற்கான அனைத்து முயற்சிகள் எடுக்கப்படும் என்றும் எனவே பொன். இராதாகிருஷ்ணன் தனது உண்ணாவிரதத்தைக் கை விட வேண்டுமென்றும் இல. கணேசன் அவர்களிடம் கூறினார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை